செ. வெ. எண்: 51

நாள்: 25.10.2017

ந.க.யு2/456/2017

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
உதகமண்டலம்.
நாள்: 24.10.2017

## பத்திரிக்கை செய்தி

நீலகிரி மாவட்டத்தில் உள்ள அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற தமிழ்நாடு அரசு வெளியிட்ட அரசாணை நிலை எண் 540 வருவாய் (LD 6(2) துறை நாள்:04.12.2017 -இன் கீழ் நடவடிக்கை கோரும் பொதுமக்கள் **http://gdp.tn.gov.in** என்னும் இணையதள முகவரிக்கு சென்று தங்களது மனுக்களை பதிவு செய்யலாம். இந்த வலைதளத்தில் உள்ளே சென்று **இணைய வழி மனுக்கள் பொது மக்களுக்கு மட்டும்** (Online Petition only for Public) என்பதை சொடுக்கி தங்களின் 10 இலக்க **கைபேசி எண்ணை** (Mobile Number) பதிவு செய்ய வேண்டும். பின்னர் பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணிற்கு வரும் **கடவுச்சொல்லினை** (OTP) அதற்குரிய கட்டத்தில் பதிவு செய்யவேண்டும். பின்னர் **மனு பெற்ற வழி** (Source) என்பதனை சொடுக்கி இணைவழி கோரிக்கை என்பதை தேர்வு செய்யவும். பின்னர் **மனு வகை** (Petition Type) என்பதனை சொடுக்கி மனுவின் வகையினை தேர்வு செய்யவும், பின் **துறையின் பெயர்** (Department) **என்பதை சொடுக்கி வருவாய்த்துறை என** தேர்வு செய்ய வேண்டும். பின்ர் **மனு முதன்மை பிரிவு** (Main Category) என்பதில் சென்று **நிலம் மற்றும் சார்ந்த துறைகள்** என்பதை தேர்வு செய்ய வேண்டும். பின்னர் **துணை பிரிவு** என்பதை சொடுக்கி **ஆக்கிரமிப்பு அகற்றுதல் அரசு ஆணை எண்** 540 என தேர்வு செய்து மனுதாரர் தனது கோரிக்கையை பதிவு செய்ய வேண்டும். பின்னர் மனுதாரர் தனது சுய விபரங்களை அதற்குரிய கட்டங்களில் பதிவு செய்து **சேமி** என்பதை சொடுக்கி மனுவினை பதிவு செய்ய வேண்டும். அதன் பின் மனுதாரரின் கைபேசி எண்ணிற்கு மனு பதிவு எண்ணை குறிப்பிட்டு ஒரு குறுந்தகவல் அனுப்பி வைக்கப்படும். மனுதாரர்களால் மேற்கண்ட வலைதளத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்து மனுக்களையும் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்ட விபரங்களை குறுந்தகவல்களாக சம்பந்தப்பட்ட மனுதாரரினால் பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணிற்கு அனுப்பிவைக்கப்படும். மனுதாரர் விரும்பினால் மேற்கண்ட வலைதள முகவரிக்கு சென்று **மனுவின் நிலையை அறியவும்** என்பதனை சொடுக்கி தனது மனு **எண்ணைக்குறிப்பிட்டு** தங்கள் மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விபரத்தினை அறிந்து கொள்ளலாம்.

எனவே, அரசு நிலங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பான தங்களின் குறைதீர் மனுக்களை இவ்வழிமுறைகளைப் பின்பற்றி பதிவு செய்து பயன்பெறுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/--இன்னசன்ட் திவ்யா இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்
நீலகிரி மாவட்டம்.

//உ.ந.உ.ப//

மாவட்ட ஆட்சியருக்காக
நீலகிரி மாவட்டம்.